FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2021 ஏப்ரல்

தொகுதி 04










ஊடக சுதந்திரம் குறித்து ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள், சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின், நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் சம்பந்தமாகவும் சுருக்கமான முறையில் அறிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை தொடர்பான சம்பவங்களும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஊடக சுதந்திரம் தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளும்போது சுதந்திர ஊடக இயக்கத்தால் தேர்தேடுக்கப்பட்ட பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 09 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஏப்ரல் 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுதந்திர ஊடக இயக்கம் இரு சம்பவங்கள் குறித்து ஊடக அறிக்கை வெளியிட்டதுடன் ஒரு சம்பவம் தொடர்பில் சகோதர ஊடக அமைப்புகளுடன் இணைந்து ஊடக இயக்கங்களின் கூட்டமைப்பு என்ற வகையில் ஒரு கூட்டு அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

## ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்

1. மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது, செய்தி அறிவதற்கான ஊடகவியலாளர்களுக்கு காணப்படும் உரிமையை வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த தடை தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.
2. ஆர்ப்பாட்டம் ஒன்றை அறிக்கையிட்டு கொண்டிருக்கும் போது சுயாதீன ஊடகவியலாளரான மலிக அபேகோன் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டமை.
3. தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான முகமது அஹ்னாப் முஹம்மது ஜசீம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு வருட காலம் எந்தவொரு குற்றச்சாட்டும் இன்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டமை.
4. ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் உட்பட அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள சகல வழக்குகளையும் தள்ளுபடி செய்வதற்கான பிரேரணையை பாராளுமன்றத்தின் ஒழுங்கு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை.
5. இணையம் மூலம் தவறான மற்றும் போலி செய்திகளில் இருந்து

பாதுகாப்பு பெறுவதற்காக தேவையான சட்டங்களை இயற்ற நீதி மற்றும் வெகுசன ஊடகங்களுக்கு பொறுப்பான அமைச்சர்கள் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தமை.

6. ஜனாதிபதியை முகப்புத்தகத்தில் (சமூக வலைத்தளத்தில்) கடுமையாக விமர்சிக்கும் வகையில் பதிவிட்ட இரு அரச ஊழியர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று விசாரணை தொடரப்பட்டுள்ளதுடன் மேலும் அவர்களை இடமாற்றமும் செய்யப்பட்டமை.

7. சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் "சதொச" ஊடாக வழங்கப்பட்ட நிவாரண பொதியின் தரம் தொடர்பாக பகிரங்க விமர்சனங்களை முன்வைத்த நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தவிசாளர் அசேல சம்பத் முன்னர் காணப்பட்ட நிலுவை வழக்கு தொடர்பில் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைய கைது செய்யப்பட்டமை.

8. போர்க்குற்றங்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான இராணுவ மற்றும் மேல்நிலை அரசாங்க அதிகாரிகளுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தகோரி முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவை நிராகரிக்குமாறு நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (ICJ) இலங்கையை அழைப்பு விடுத்துள்ளமை.

9. பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு,பிரமுகர் வாகன தொடரணிக்கு சிறப்பு வாய்ப்பு வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக காத்திருந்த வாகன ஓட்டுனர்களிடம் வாகனத்தில் ஒலி எழுப்பி எதிர்ப்பு வெளியிட வழியேற்படுத்திய இளைஞரை கைது செய்தமை சம்பவம்.

**அட்டவணை எண்: 01**

**அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள்– ஏப்ரல் 2021**

| இலக்கம் | உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூருகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 01 |
| 02 | சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 08 |
| | **மொத்தம்** | **09** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம் ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிப்பதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமாயின், குடிமக்கள் எந்த வித தடைகளும் இன்றி ஊடகங்கள் மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் வெளிப்படுத்துவதற்கான சூழல் காணப்பட வேண்டும். இந்த குறித்த அடிப்படை சுதந்திரத்தை சவாலுக்கு உட்படுத்தும் அல்லது மீறும் சம்பவம் ஒன்று ஏப்ரல் மாதத்தில் பதிவாகியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.**

**அட்டவணை: 2**

**2021 ஏப்ரல் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 01**

| இலக்கம் | நிகழ்வு மற்றும் சம்பவம் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | உடல் ரீதியான துஷ்பிரயோகம் | 01 |
| | **மொத்தம்** | **01** |

## மார்ச் மாதத்திற்கான புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

**01. ஆர்ப்பாட்டம் ஒன்றை அறிக்கையிட்டு கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சுயாதீன ஊடகவியலாளரான மலிக அபேகோன் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்.**

2021-04-07 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அருகாமையில் சுகாதார ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது சுயாதீன ஊடகவியலாளர் மற்றும் கலைஞருமான மலிக அபேகோன் மரதானை காவல்துறையால் கைது செய்யப்பட்டார். அவர் முன்னணி சோஷலிச கட்சியின் செயற்பாட்டாளர் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின்

முன்னாள் மாணவர் தலைவராக செயற்பட்டவர் ஆகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் கைது செய்யப்பட்டு காவல்துறைக்கு சொந்தமான (வாகனத்தில்) ஜீப்பில் அழைத்துச் செல்லப்பட்ட சந்தர்பத்திலும் பின்னர் காவல் நிலையத்திற்குள்ளும் தாக்கப்பட்டார். மேலும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த போது அவரை பார்வையிட சென்ற வழக்கறிஞர் மற்றும் குறித்த ஊடகவியாலாளருக்கு நெருக்கமான ஒருவருக்கும் முதலில் அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.மேலும் தாக்குதலுக்கு உள்ளான ஊடகவியலாளரை மருத்துவர் முன் ஆஜரபடுத்தப்பட வேண்டும் என்ற பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு முன்வைத்த கோரிக்கையையும் காவல்துறையினர் நிராகரித்துள்ளனர்.

மலிக அபேகோன் ஏப்ரல் 08 ஆம் திகதி மாளிகாகந்த மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவர் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை என தெரிவிக்கும் மருத்துவ அறிக்கையுடன் காவல்துறை அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜரபடுத்தப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும். மேலும் பாதிக்கப்பட்டவர் சார்பில் முன்வைக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக அரச மருத்துவ அதிகாரியின் மூலம் மீண்டும் ஒரு மருத்துவ அறிக்கையொன்றை பெற்றுத்தருமாறு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் நீதவான் ஊடகவியலாளர் மலிக்க அபேகோன்னை ஏப்ரல் 12 ஆம் திகதி வரை தடுப்பு காவலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். மேலும் அவர் 12 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

குறித்த சம்பவத்தை கடுமையாக கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்ட சுதந்திர ஊடக இயக்கம் குறித்த சம்பவம் தொடர்பில் முறையான, பக்கச்சாற்பற்ற விசாரணையை மேற்கொண்டு பொறுப்புகூற வேண்டிய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், ஊடகவியலாளரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் சுதந்திர ஊடக இயக்கம் வேண்டுகோள் விடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். மலிக்க அபேகோன் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டதை தொடர்ந்து சுகாதார ஊழியர் சங்கம் தேசிய வைத்தியசாலைக்கு முன்னாலும் , முன்னணி சோஷலிச கட்சியின் ஆர்வலர்கள் மரதானை காவல் நிலையத்திற்கு முன்னாலும் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பில் சட்டவிதிமுறை தலைப்பு அல்லது பகுதி கூறுக்குள் உள்ளடக்கப்படும் ஏழு நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஏப்ரல் மாத அறிக்கையில் கண்காணிக்கபட்டு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அந்த நிகழ்வுகள் சட்டரீதியான நடவடிக்கை,ஊடக சுதந்திரத்திற்கு கட்டுபாடுகள் விதித்தல், சட்ட மறுசீரமைப்பு மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றச்செயலுக்கு தண்டனை விதிவிலக்கு அளித்தல் போன்ற துணை தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.**

**அட்டவணை 3: 2021 ஏப்ரல்: சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– நிகழ்வுகள் 07**

| இலக்கம் | நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள்/சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 04 |
| 02 | ஊடகங்களுக்கு சட்டரீதியான கட்டுப்பாடுகளை விதித்தல | 01 |
| 03 | சட்ட மறுசீரமைப்பு பரிந்துரை | 01 |
| 04 | ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றச்செயலுக்கு தண்டனை விதிவிலக்கு அளித்தல | 02 |
| | **மொத்தம்** | **08** |

## மார்ச் மாதத்திற்கான புதிய நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்

01. **மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது, செய்தி அறிவதற்கான ஊடகவியலாளர்களுக்கு காணப்படும் உரிமையை வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த தடை தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.**

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது, செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரான ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்னவின் கையொப்பம் இட்ட சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுற்றறிக்கை எண் 2/2021 மூலம் இதுவரை மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக்

குழுக் கூட்டங்களின்போது செய்திகளை அறிக்கையிடுவதற்காக ஊடகங்களுக்கு காணப்பட்ட வாய்ப்பானது குறித்த சுற்றறிக்கையின் ஊடாக பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இந்தக் கூட்டங்கள் தொடர்பான செய்திகளை அறிக்கையிட வேண்டுமாயின், ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அல்லது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர், அந்தக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் தனியாகக் கலந்துரையாடித் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று குறித்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது இதற்கு முன்னதாக நடைமுறையில் காணப்பட்ட, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மூலம் வெளியிடப்பட்ட 2017-05-22 திகதியிடப்பட்ட, எண் 6/2017 சுற்றறிக்கையின்,25,26 ஆம் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது குறித்த குழுக்கூட்டம் ஆனது ஊடகவியலாளர்களுக்கு திறந்தவை என்றும் ஊடகவியாளர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவது சம்பந்தப்பட்ட பிரதேச செயலகம்/மாவட்ட செயலகத்தின் பொறுப்பாகும் என குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கதாகும்.

குறித்த மாவட்ட மற்றும் பிராந்திய அபிவிருத்தி குழு கூட்டங்கள் அந்தந்த பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அரசாங்க முடிவுகள் குறித்து ஊடகங்களுக்கு செய்தி பெற்றுக் கொள்வதற்கான ஒருபிரதானவழியாககாணப்படுகின்றது. மேலும்அந்தகூட்டங்களை அறிக்கையிடுவது பிராந்திய நிருபர்கள்/ஊடகவியலாளர்களின் பிரதான கடமைகளில் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும்.இந்த சுற்றறிக்கையானது முன்னர் காணப்பட்ட தகவலுக்கான அணுகலைத் தடுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.தகவல் அறியும் உரிமை சட்டப்பூர்வமாக்கப்பட்ட சூழலில் குறித்த சுற்றறிக்கையானது பின்னோக்கி இட்டுசெல்லும் செயற்பாடாகவே காணப்படுகின்றது.

2021 ஏப்ரல் 4 ஆம் திகதி லங்காதீப வலைத்தளம் வெகுசன ஊடக அமைச்சரிடம் இது குறித்து வினவியபோது அவர் குறிப்பிட்டதாவது குறித்த விவகாரம் தொடர்பில் தனக்கு ஏதும் தெரியாது என்பதாகும். ஆதாரம்: https://bit.ly/3x5WFnH

மாத்தளை இலங்கை பத்திரிகையாளர் சங்கம் மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கை தொடர்பில் தமது எதிர்ப்பை தெரிவித்து 2021-04-07 திகதியிடப்பட்ட கடிதமொன்றை வெகுசன ஊடக அமைச்சரிற்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**02.தமிழ் மொழி ஆசிரியரும் கவிஞருமான முகமது அஹ்னாப் முஹம்மது ஜஸீம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு வருட காலம் எந்தவொரு குற்றச்சாட்டும் இன்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டமை.**

முகமது அஹ்னாப் முஹம்மது ஜசீம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினால் 2020 மே 16 ஆம் திகதி கைது செய்யப்பட்டு இன்றுவரை நீதிமன்றத்திற்கு முன்னால் எவ்வித குற்றச்சாட்டுமின்றி தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக ஏப்ரல் 10 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தில் ஒரு அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

அடிப்படை உரிமைகள் மனுவில் பிரதிவாதிகளாக பாதுகாப்பு அமைச்சின் பொதுச் செயலாளர் கமல் குணரத்ன, பொலிஸ்மா அதிபர், CTID பணிப்பாளர் பிரசன்ன டி அல்விஸ், மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவின் வவுனியா பிரிவின் காவல் ஆய்வாளர் கே.கே.ஜே. அனுர சாந்த மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அஹ்னாப்பை தடுத்து வைப்பதற்காக 2020 மே 19 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை குறித்த மனு சவாலுக்கு உட்படுத்துவதாகவும்,அஹ்னாப்தடுப்புக்காவலில்வைக்கப்பட்டிருந்த போது சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளமையும், மேலும் அவர் மீது புனையப்பட்ட குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொள்ளும்படி கட்டாயப்படுத்திய சம்பவம் போன்றவை குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வழக்கறிஞர் சஞ்சய வில்சன் ஜெயசேகர மேற்கோள்காட்டி JDS வலைத்தளம் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். (ஆதாரங்கள் 1. https://bit.ly/3eE4FnN 2. https://bit.ly/3voScen )

**03.ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் உட்பட அரசாங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையினர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்குகளை தள்ளுபடி செய்வதற்கான பிரேரணையை பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை.**

ஜனாதிபதியினால் நிறுவப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு (உபாலி அபேரத்ன ஆணைக்குழு) பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டி பிரதமரின் மூலம் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏப்ரல் 21 ஆம் திகதி பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது குறித்து தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திசாநாயக மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் எரான் விக்ரமரத்ன போன்ற பாராளுமன்ற அமைச்சர்கள் வெவ்வேறு இரு ஊடக சந்திப்பில் கூறியதாவது, இராணுவ அதிகாரிகள் மற்றும் வேறு அரச அதிகாரிகள் குறித்த 70 வழக்குகளில் பிரதிவாதிகளாக காணப்படுவதினால் குறித்த 70 வழக்குகளையும் நீக்க வேண்டி ஆணைக்குழு முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மஹிந்த ராஜபக்ச ஆட்சியின் போது நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கு எதிராக இடம்பெற்ற ,லசந்த விக்ரமதுங்க கொலை, கீத் நோயார் கடத்தல் மற்றும் தாக்கப்பட்டமை சம்பவம்,உபாலி தென்னகோன் தாக்கப்பட்டமை சம்பவம்,பிரகீத் எக்நெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் போன்ற குற்றச்செயல்கள் அதில் அடங்கும். (ஆதாரம் 1: https://youtu.be/_Hlokzwft3Y) பாதுகாப்பு படையினரின் உறுப்பினர்கள் அந்த வழக்குகளில் பிரதிவாதிகளாக காணப்படுவதனால் இந்த வழக்குகளை தள்ளுபடி செய்வதற்கு ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

இது தொடர்பில் ஆணையத்தின் இறுதி அறிக்கை பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் தீர்மானமாக ஏப்ரல் 22 மற்றும் 23 திகதிகளில் விவாதத்திற்கு எடுக்கப்பட்டதுடன் குறித்த ஆணைக்குழுவின் பரிந்துரையானது எதிர் தரப்பு அமைச்சர்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

**04.இணையம் மூலம் தவறான மற்றும் போலி செய்திகளில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தேவையான சட்டங்களை இயற்ற நீதி மற்றும் வெகுசன ஊடகங்களுக்கு பொறுப்பான அமைச்சர்கள் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தமை.**

இணையவழி மூலம் தவறான மற்றும் போலி செய்திகளில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தேவையான சட்டங்களை இயற்ற நீதி மற்றும் வெகுசன ஊடகங்களுக்கு பொறுப்பான அமைச்சர்கள் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.ஏப்ரல் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் குறித்த சட்டம் தொடர்பான தீர்மானத்திற்கான

நோக்கம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இணையத்தில் போலி மற்றும் தவறான தகவல்கள் பகிரப்படுவதானது பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதுடன், மேலும் இந்த நிலைமையானது சமூகங்களுக்கு இடையில் விரிசல்களை ஏற்படுத்துவதுடன், வெறுப்பை பரப்புவதற்கும், ஜனநாயக நிறுவனங்களை பலவீனப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. குறித்த பிரச்சினையை தீர்க்க பல்வேறு நாடுகள் ஏற்கனவே சட்டமியற்ற நடவடிக்கை எடுத்துள்ளன. இணைய வழி ஊடாக போலி பிரச்சாரத்தால் ஏற்படும் தீங்குகளில் இருந்து சமூகத்தைப் பாதுகாக்க ஒரு புதிய சட்டத்தின் தேவைப்பாடு காணப்படுவதுடன் மேலும் குறித்த சட்டம் அறிமுகப்படுத்துவதன் மூலம் குடிமக்களிற்கும் மற்றும் சிவில் சமூகத்திற்கும் துல்லியமான தகவல்களை அணுக வாய்ப்பு கிட்டும். அதன் பிரகாரம், நீதி அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கூட்டு பிரேரணைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. (ஆதாரம்: https://sinhala.dgi.gov.lk/cabinet-decisions-sri-lanka)

இதுபோன்ற புதிய சட்டங்களை விதிக்க வேண்டிய அவசியம் குறித்து வெகுசன ஊடக அமைச்சரும் நீதி அமைச்சரும் அவ்வப்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்த நிலையில், இந்த அமைச்சரக தீர்மானமானது குறித்த யோசனைகளை செயல்படுத்துவதற்கான முன் ஏற்பாடு என்பது தெளிவாகின்றது. ஏப்ரல் 19 ம் திகதி, டெய்லி மிரர் அறிக்கையிட்டதன் படி, " முன்மொழியப்பட்ட புதிய சட்டங்கள் ஆனது "தேசிய பாதுகாப்பு, சமூக ஒற்றுமையை உறுதிப்படுத்துதல், பொதுமக்களின் தனியுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்த தவறான தகவல்களைப் பரப்புவதை தடுத்தல்" போன்றவையே குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படை நோக்கமாகும் என்பதை நீதித்துறை அமைச்சர் அலி சப்ரி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு உத்தேச சட்டமூலம் தொடர்பான ஊடக மாநாட்டில் கலந்துகொண்டபோது தெரிவித்தார். (ஆதாரம்: https://bit.ly/3tzbq05)

குறித்த அமைச்சரவை தீர்மானம் தொடர்பில்,ஊடக அறிக்கையொன்றை வெளியிட்ட சுதந்திர ஊடக இயக்கம், குறித்த தீர்மானமானது கருத்து தெரிவிக்கும் உரிமை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் செயற்பாடாக அடையாளம் காட்டுவதுடன் குறித்த தீர்மானம் தொடர்பில் கடும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொண்டது, மேலும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டதாவது அரசாங்கம் மேலே குறிப்பிட்ட சட்டத்தை இயற்றுவதின் மூலம் அரச அதிகாரிகளுக்கு தேவைப்படும் விதத்தில் "போலி செய்தி" என்பதனை வரைவிலக்கணம் இட்டு ஊடக அடக்குமுறைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் கருத்து தெரிவிக்கும் உரிமையை மீறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாடாக காணப்படுகின்றது

**05.ஜனாதிபதியை முகப்புத்தகத்தில் (சமூக வலைத்தளத்தில்) கடுமையாக விமர்சிக்கும் வகையில் பதிவிட்ட இரு அரச ஊழியர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று விசாரணை தொடரப்பட்டுள்ளதுடன் மேலும் அவர்களை இடமாற்றமும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.**

முகப்புத்தக (சமூக வலைத்தள)த்தில் ஜனாதிபதியை விமர்சிக்கும் விதமாக பதிவிட்ட குற்றச்சாட்டின் பேரில் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து செயற்படும் அரச ஊழியர்கள் இருவருக்கு எதிராக , ஒழுக்காற்று விசாரணை தொடரப்பட்டுள்ளதுடன் அவர்கள் இருவரும் தற்காலிக இடமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

வாகன ஒழுங்குறுத்துறை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சகத்தின் மேலதிக செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட 202.03.29 கொண்ட கடிதத்தின் மூலம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் தலைவர் மருத்துவர் சவீந்திர கமகேவின் உத்தரவின் கீழ் குறித்த இடமாற்றம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம் பாராளுமன்ற உரையில் போது காமினி லொகுகே அமைச்சரிடம் வினவியபோது அவர் தெரிவித்த விடயமாவது குறித்த நிறுவனம் இராஜாங்க அமைச்சிற்கு உரியதாக காணப்படுவதுடன் இருப்பினும் தான் இது தொடர்பில் அறிக்கையொன்றை கோரியுள்ளதாக பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார். ஆதாரம்: https://bit.ly/3v2byWo

சமூக வலைத்தளங்களில் ஊடாக பதிவிடப்படும் பல்வேறு பதிவுகள் தொடர்பில் பல்வேறு நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை பரவாலக காணக்கூடியதாக இருந்த போதிலும் 'ஜனாதிபதியை விமர்சனம் செய்தல்' சம்பந்தமாக நிறுவன ரீதியில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளும் முதலாவது நடவடிக்கை இதுவேயாகும்.

**06. சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் "சதொச" ஊடாக வழங்கப்பட்ட நிவாரண பொதியின் தரம் தொடர்பில் பகிரங்க விமர்சனங்களை முன்வைத்த நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தவிசாளர் அசேல சம்பத் முன்னர் காணப்பட்ட அதாவது நிலுவையில் காணப்படும் வழக்கொன்று தொடர்பில் பழைய பிடியாணைக்கு அமைய கைது செய்யப்பட்டமை.**

சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் வர்த்தக அமைச்சரின் தலையீட்டின் கீழ் சதொச நிறுவனத்தின் ஊடாக ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட நிவாரண பொதி வழங்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த நிவாரண பொதி தொடர்பாக ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தவிசாளர் அசேல சம்பத் குறித்த நிவாரண பொதியின் தரம் பற்றி கடுமையாக விமர்சித்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஆதாரம்: https://bit.ly/3dXya4P)

ஏப்ரல் 12 ம் திகதி நடைபெற்ற செய்தி மாநாட்டைத் தொடர்ந்து ஏப்ரல் 13 ஆம் திகதி கம்பனித்தெரு காவல்துறையினரால் அவர் கைது செய்யப்பட்டதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் ஏப்ரல் 19 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். அதனை தொடர்ந்து கோட்டை மாஜிஸ்திரேட் நீதிபதி ஏப்ரல் 19 ஆம் திகதி அன்று அவரை பிணையில் விடுவித்தமை கவனிக்கத்தக்கதாகும்.

அசேல சம்பத் கைது செய்யப்பட்டமையும், அவர் தெரிவித்த விமர்சனரீதியான கருத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்பதாகவும் , மேலும் அவர் கைது செய்யப்பட்டமையானது அவருக்கு எதிராக நிலுவையில் காணப்பட்ட வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராக தவறியதற்காக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவின் கீழ் ஆகும் என அரச தரப்பினர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கதாகும். இருப்பினும் அசேல சம்பத் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் சக்தி இயக்கம் முன்வைக்கும் விடயமாவது குறித்த நிவாரண பொதியின் தரம் தொடர்பாக விமர்சித்தமையே அவரை கைது செய்ததற்கான பிரதான காரணமாகும். அசேல சம்பத்தின் வழக்கறிஞரான சேனக பெரேரா குறிப்பிடுவதாவது அசேல சம்பத் கைது தொடர்பில் பழைய பிடியாணையை அமுல்படுத்தியதோடு அது மட்டுமல்லாமல் சதொச நிவாரண பொதி தொடர்பாக விமர்சித்தமையானது அரசாங்கத்தை இக்கட்டான நிலைமைக்கு உட்படுத்தியதாகவும் மேலும் சதொச விற்பனை நிலையங்களின் விற்பனை அளவு குறைந்துள்ளதாக கூறி அசேல சம்பத்திற்கு எதிராக இன்னொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வர்த்தக அமைச்சரான பந்துல குணவர்தன குறித்த சம்பவம் தொடர்பில் ஏப்ரல் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்ததுடன் மேலும் அவர் நிவாரண பொதி தொடர்பாக அசேல சம்பத்தின் குற்றச்சாட்டை நிராகரித்தார். சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு எதிராக சதொசவின் தலைவர்,தாச சமூக அமைப்பு மற்றும் சம்பந்தப்பட்ட தேயிலை வர்த்தகர்கள் மூலம் அசேல சம்பத்திற்கு எதிராக காவல்துறையிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தமக்கு மேற்கொள்ளப்பட்ட அவமதிப்பு தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு தனது வழக்கறிஞரை கேட்டுக்கொண்டதாகவும் தனது உரையில் குறிப்பிட்டார்.(ஆதாரம்: https://bit.ly/3u0SIyG)

இந்த சம்பவத்தின் பின்னணி சர்ச்சைக்குரியதாக இருந்த போதிலும் தற்போதைய அரசாங்கத்தை விமர்சிப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும் போக்கை காட்டுகின்றது.

**07.போர்க்குற்றங்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான இராணுவ மற்றும் மேல்நிலை அரசாங்க அதிகாரிகளுக்கு எதிரான வழக்கு விசாரணை நடவடிக்கைகளை நிறுத்தகோரி முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவை நிராகரிக்குமாறு நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (ICJ) இலங்கையை அழைப்பு விடுத்துள்ளமை.**

ஜனாதிபதியினால் நிறுவப்பட்ட அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, போர்க்குற்றங்கள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான இராணுவ மற்றும் உயர் அரசு அதிகாரிகளுக்கு எதிராக காணப்படும் வழக்கு விசாரணைகளை நிறுத்திவைக்கும் தீர்மானத்தை நிராகரிக்க கோரி நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (ICJ) இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

23-04-2021 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில் அது குறித்து கருத்து தெரிவிக்கும் சர்வதேச நீதிமன்றம், குறித்த ஆணைக்குழுவின் அறிக்கை "நீதிமன்ற சுயாதீனத்துவம் மற்றும் சட்ட அதிகாரத்திற்கான அவமானம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறித்த விசேட சலுகையானது குடிமக்கள் சகலருக்கும் சமமாக பெற்றுக்கொள்ள முடியாத விடயமாகவும் காணப்படுகின்றது.

சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியரான லசந்த விக்ரமதுங்க கொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னேலிகொட பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் கீத் நோயார் கடத்தப்படுதல் சம்பவங்களுடன் தொடர்புடைய அனைத்து வழக்குகளையும் அகற்றுவதற்கு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளதுடன் மேலும் குறித்த வழக்கு விசாரணைகளில் "புனையப்பட்ட சாட்சிகள்" காணப்படுவதாகவும் மற்றும் குறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களான விசாரணை நடத்தியவர்கள்,வழக்கறிஞர்கள் ,வழக்கு தாக்கல் செய்த அதிகாரிகளுக்கு எதிராக ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் வழக்கு தொடருமாறும் ஆணைக்குழு பரிந்துரையில் உள்ளடங்கியுள்ளதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழு பரிந்துரையானது "சட்ட வல்லுனர்கள்,வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கு தாக்கல் செய்பவர்களின் தொழில்முறை மற்றும் சட்டரீதியான கடமைகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரம்,சுயாதீன நீதித்துறையின் மீதான பாரிய தாக்குதலாகும் மேலும் இந்த பரிந்துரை முழுமையாக நிராகரிக்கப்பட வேண்டியதாகவும் காணப்படுகின்றது" என்று குறித்த அறிக்கையில் மேலும் விவரிக்கின்றமை கவனிக்கத்தக்கதாகும்.

இந்த ஆணைக்குழு பரிந்துரையின் மூலம் நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் நீதித்துறை நடவடிக்கைகள் போன்றவை நீதித்துறை கட்டமைப்புக்கு வெளியே மறு மதிப்பீடு செய்யப்படுவதால் நீதித்துறையின் சுயாதீனத்துவத்தை தடுக்கும் நடவடிக்கையாகும். மேலும் குறித்த நடவடிக்கையானது அதிகாரங்களை பிரிப்பதற்கான தத்துவங்களை மீறும் செயற்பாடாக காணப்படுவதாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.ஆதாரம்: https://bit.ly/3esqmac

**08.பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு,பிரமுகர் வாகன தொடரணிக்கு சிறப்பு வாய்ப்பு வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக காத்திருந்த வாகன ஓட்டுனர்களிடம் வாகனத்தில் ஒலி எழுப்பி தமது எதிர்ப்பை வெளியிட வழியேற்படுத்திய இளைஞரை கைது செய்தமை சம்பவம்.**

ஏப்ரல் 27 ஆம் திகதி இரவு சீன வெளிநாட்டு அமைச்சரை வரவழைத்து வந்த பிரமுகர் வாகன தொடரணிக்கு இடமளிக்கும் விதமாக பொரள்ள புனித மாகஸ் பிரனாண்டு மாவத்தை வீதியை மூடியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நடவடிக்கையாக வாகனங்களில் ஒலி எழுப்பியை பாவித்து தமது எதிர்ப்பை தெரிவிக்குமாறு காத்திருந்த ஓட்டுனர்களை ஊக்குவித்த இளைஞர் ஒருவர் 29 ஆம் திகதி பொரள்ள காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டார். 31 வயதான நவீன் மாதவ என்ற பத்தரமுல்லவை சேர்ந்த நபரே குறித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டதாவது குறித்த நபர் காவல்த்துறையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் சட்டத்தை மீறும் வகையில் கூட்டத்தை ஏற்பாடு செய்தமையே கைதுக்கான காரணமாகும் என்பதாகும். (ஆதாரம்: https://bit.ly/2PJgwZf)

அவர் 30 ஆம் திகதி கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், வழக்கு மே 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களிடம் பேசிய நவீன் மாதவ, தான் தவறு செய்ததாகவும், இலங்கை அரசு மற்றும் காவல்துறையினரிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்வதாகவும் கூறினார். மன்னிப்பு கேட்கும்படி யாராவது உங்களை கட்டாயப்படுத்தியிருக்கிறார்களா என்று ஊடகவியலாளர் வினவியபோது அவர் கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார். (ஆதாரம்: https://bit.ly/33bQ25z)

இந்த சம்பவத்தை அந்த இளைஞன் தனது கையடக்க தொலைப்பேசியில் வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டதனை தொடர்ந்து குறித்த காணொளிப்பதிவானது பரவலாக பகிரப்பட்டது. குறித்த வீதி ஏன் மூடப்பட்டுள்ளது என்று அந்த இளைஞர் காவல்துறை அதிகாரியிடம் வினவுவது காணொளிப்பதிவில் காணக்கூடியதாக உள்ளதுடன் ,மேலும் குறித்த தற்காலிக வீதி மூடியமையானது பிரமுகர் பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என காவல்துறை அதிகாரி பதில்சொல்லுவதை தொடர்ந்து காத்திருந்த வாகன ஓட்டுனர்களை அழைத்து தமது எதிர்ப்பை தெரிவிக்கும் விதமாக தமது வாகன் ஒலி எழுப்பியை பயன்படுத்துமாறு கோருவதும் ஓட்டுனர்கள் ஒலி எழுப்பும் காட்சியும் குறித்த காணொளிப்பதிவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஆதாரம்: https://bit.ly/2ShqUrT)

குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்த விவகாரம் ஊடகங்களில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டதுடன் "அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்புக்கான உரிமையை பறிப்பது என்பது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரத்தை மீறும் செயலாகும்" என்ற தொனியில்

சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட ஊடக அமைப்புகளின் கூட்டமைப்பு ஒரு ஒன்றிணைந்த ஊடக அறிக்கையொன்றையும் வெளியிட்டது,. (ஆதாரம்:)

எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிர்ப்பு தெரிவிக்க ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்பதைக் கடந்தகால பல உச்சநீதிமன்ற தீர்ப்புகளிலிருந்து ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பிரபல வழக்கான அமரதுங்க எதிரிவ சிரிமல் மற்றும் பலர், என்கிற ஜனகோஷா வழக்கு (264 SLR (1993) 1) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதையும் குறித்த ஊடக அறிக்கையில் நினைவுகூர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**அட்டவணை 4: ஊடக சுதந்திரம்: 2021 சனவரி முதல் மார்ச் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள் | 2021 ஜனவரி–மார்ச் | ஏப்ரல் 2021 |
|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 13 | 01 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 14 | 08 |
| ஊடக சுயாதீனத்துவம் | 01 | |
| **மொத்தம்** | **28** | **09** |

[ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை - 2021-01/03]

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener | Seetha Ranjanee +94 77 731 2460 | Secretary | Lasantha De Silva +94 71 166 7938
Treasurer | Thaha Muzammil +94 77 374 1026
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25